வரையறுத்த சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் உரிமை கூற்று, மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடமிருந்தும் இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்தும் அறவிட வேண்டிய பெறுமதி முறையே ரூபா 47,627,397 மற்றும் ரூபா 23,610,959 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனத்தால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் அப்பெறுமதி முறையே ரூபா 63,672,397 மற்றும் ரூபா 31,610,959 ஆக இருந்தன.

(ஆ) கம்பனிக்கு சொந்தமான ரூபா 142,502,287 குத்தகைப் பெறுமதியான 5,733 ஹெக்டயர் காணிகளுக்குரிய காணிகள் தொடர்பான திட்ட வரைபடம் கம்பனியிடம் இருக்கவில்லை.

(இ) கம்பனியால் வரையறுத்த இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனம் அரசாங்க வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிற்கு 2010 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட குறுங்காலக் கடனுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய பெறுமதி முறையே ரூபா 10,000,000 மற்றும் ரூபா 15,000,000 மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிக் கூற்றுக்ககள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் முனைப்பழியாக்கப்பட்ட அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்களானவை வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைத் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் கட்டளையிடப்பட்டவாறு பின்வரும் விடயங்களைத் தருகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் நோக்கெல்லையும் மற்றும் மட்டுப்படுத்தல்களும் மேலே தரப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) எனது அபிப்பிராயமானது.

- கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதுவும் எனது பரிசோதனைகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்டவாறு கம்பனியால் முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்பதுவும்.

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியுள்ளன என்பதுவும் எனது அபிப்பிராயமாகும்.

-

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் தாபனவிதிக் கோவை | |
| (i) 7 ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி | 2008 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை சேர்த்துக்கொள்ளப்பட்ட 6 உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கும் போது அப்பதவிகளுக்குரிய ஆரம்பச் சம்பள படிநிலையை விட அதிக சம்பளத்தில் அமர்த்தியதன் காரணமாக 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ரூபா 3,032,873 மேலதிக சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) V ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பந்தி | விடுமுறையைப் பெற்றுக்கொள்ளாது கடமைக்குச் சமூகமளிக்காத ஒரு உத்தியோகத்தர் உரிய திகதியிலிருந்து தனது பதவியை கைவிட்டுச் சென்றுள்ளதாகக் கருதி சேவையிலிருந்து நீக்கப்பட வேண்டிய போதிலும் உதவி தோட்ட அத்தியட்சகர் 2016 நவம்பர் 28 ஆந் திகதியிலிருந்து தெரியப்படுத்தாது சேவைக்கு சமூகமளிக்காதிருந்தும் அந்த உத்தியோகத்தர்களுக்கு சேவையை விட்டுச் செல்லுதல் கடிதம் வழங்கப்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு இந்த அறிக்கை வழங்கப்பட்ட திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகளில் உள்ளடக்கப்படாத சம்பளங்களையும் படிகளையும் செலுத்துவதற்கு முன்னர் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபாரிசினையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினையும் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது உதவி தோட்ட அத்தியட்சகர்கள் மற்றும் தோட்ட அத்தியட்சகரல்லாத கனிஸ்ட மட்டத்திலிருந்து பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் வரையான 21 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 6,940,955 பணம் ‘‘தொழிலாளர் படியாக’’ செலுத்தப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றிக்கை | (i) | தலைவரால் சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் வரம்பினை மிகைத்து எரிபொருள் பெற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்துடன் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இன்றி அங்கீகரித்த வரம்பினை மிகைத்து பெற்றுக்கொண்ட 3,082 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 340,912 பணம் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தது. |
| | | (ii) | எரிபொருள் படிக்கு தகைமை பெற்றிராத 05 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 135,224 பெறுமதியான 1,156 லீற்றர் எரிபொருளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 81,446,237 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 69,672,008 ஆக இருந்ததன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 11,774,229 முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. உயிர் வாழ் சொத்துக்களை பெறுமதியிடல் இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 15,332,458 ஆல் அதிகரித்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதானமான தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2014 ஆம் ஆண்டில் ரூபா 62,071,904 நட்டம் சுட்டிக்காட்டப்பட்டதுடன் ஏனைய ஆண்டுகளின் இலாபத்தை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் படிப்படியாக குறைவடைந்திருந்தது. ஊழியர் ஊதியம் 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக இலாபம் குறைவடைந்திருந்தும் வருமான வரிப் பொறுப்பு 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 5,534,003 ஆல் அதிகரித்திருந்தது. கம்பனியின் பங்களிப்பு படிப்படியாக அதிகரித்திருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது ஆகக் குறைந்த பங்களிப்பு ரூபா 131,080,449 ஆக அறிவிக்கப்பட்டிகருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது பங்களிப்பு ரூபா 304,554,146 ஆகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

### 4.1.1 செயல் நடவடிக்கையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான கம்பனியின் மதிப்பீடு செய்யப்பட்ட தேங்காய் விளைச்சலை விட உள்ளபடியான தேங்காய் விளைச்சல் 32 சதவீதத்தாலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான விளைச்சல் 29 சதவீதத்தாலும் அதிகரித்துக் காணப்பட்டிருந்தும் கம்பனியின் விற்பனைக் கிரயமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 33 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முதிர்ச்சியடைந்த பயிர்ச்செய்கைக்குள் காணப்பட்ட பயிர்களில் 28 சதவீதமானவை 50 ஆண்டுகளை மிகைத்த பயிர்களாகக் காணப்பட்டமை, வறட்சிக்கு முகங்கொடுப்பதற்கு தேவையான உபாயங்கள் (தென்னை மட்டைகளை கிடங்குகளில் போடுதல்) பின்பற்றப்படாமை விளைச்சல் குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளின் பிரகாரம் நியமங்களுக்கு இணங்க பயிரிடப்பட்ட ஒரு தென்னை மரத்தின் சராசரி விளைச்சல் 72 தேங்காய்கள் அளவில் இருக்க வேண்டிய போதிலும் கம்பனியால் நிர்வகிக்கப்படுகின்ற 06 தோட்டங்களில் இப்பெறுமதி 29 இற்கும் 67 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(இ) கம்பனியால் மொத்த விளைச்சல் தரும் மரங்களின் அளவில் 1 சதவீதத்திற்கும் 8 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவானவை உயரமான மரங்களாக உள்ளதுடன் விழுந்த தேங்காய்களின் சதவீதத்தைக் குறைப்பதற்காக மாதாந்தம் தேங்காய் விளைச்சலைப் பிடுங்குவதற்கு முகாமைத்துவம் தீர்மானம் எடுத்திருந்தும் மொத்த தேங்காய் விளைச்சலில் 30 சதவீதமான 3,906,827 தேங்காய்கள் விழுந்த தேங்காய்களாகும். அதற்கிணங்க 06 தோட்டங்களில் காணப்பட்ட உயர்ந்த மரங்களின் எண்ணிக்கையையும் விழுந்த தேங்காய்களின் சதவீதத்தையும் ஒப்பீடு செய்தபோது ஒரு மரத்திலிருந்து விழுந்த தேங்காய்களின் அளவு 66 தேங்காய்களுக்கும் 95 தேங்காய்களுக்கும் இடைப்பட்ட வீச்சுடையதாகக் காணப்பட்டது. அதற்கிணங்க அது உரிய தோட்டத்தின் மரத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உள்ளபடியான தேங்காய் விளைச்சலை விட உயர்ந்த மரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விளைச்சல் அதிகமானது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) துறையில் காணப்படுகின்ற எற்றுக்கொள்ளப்பட்ட நியதியின் பிரகாரம் ஒரு ஹெக்டயர் காணியில் காணப்படவேண்டிய தென்னை மரங்களின் அளவு 158 ஆக இருந்தும் கம்பனியின் திவுலபிடிய தோட்டத்தை தவிர்த்து எஞ்சியுள்ள தோட்டங்களில் அந்த அளவு 112 இற்கும் 147 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. அதற்கிணங்க கம்பனியின் தோட்டத்தில் காணப்பட வேண்டிய மரங்களின் அளவினை விட குறைந்த அளவான மரங்களே காணப்படுகின்றமை தேங்காய் விளைச்சல் குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தது.

(உ) கம்பனி நிர்வகிக்கின்ற 06 தோட்டங்களில் முதிர்ச்சியடைந்த பயிர்களின் கீழ் இனங்காணப்பட்டுள்ள விளைச்சல் தரக்கூடிய காலம் பூர்த்தியடைந்த 108,307 தென்னை மரங்களை விளைச்சல் தரும் நிலைமைக்கு மாற்றாதுள்ளமை அவதானிக்கப்பட்டது. ஒரு மரத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ஏற்றுக்கொள்ளப்பட்ட நியம விளைச்சலின் பிரகாரம் உரிய அளவான மரங்களிலிருந்து வருடாந்தம் பெற்றுக்கொள்ளக்கூடிய 7,798,104 தேங்காய்கள் அளவான விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனிக்கு முடியாதிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தம்பபன்னி தோட்டத்திற்குச் சொந்தமான ஜசிந்தா பிரிவில் 2011 ஆம் ஆண்டில் இடம் பெற்ற 3380 தேங்காய்கள் களவு தொடர்பான வழக்கு முடிவடைந்து 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தும் இக்களவின் காரணமாக ஏற்பட்ட நிதி நட்டமான ரூபா 105,175 பெறுமதியை இலங்கை காப்புறுதிக் கம்பனியிடமிருந்து அறவிடக்கூடியதாக இருந்தும் கம்பனி உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் போது எண்ணை பிழிந்தெடுக்கும் முறைமையை நிறுவுவதற்காக ரூபா 4,850,126 பணம் ஒரு தனியார் கம்பனிக்கு செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தும் உரிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 05 ஆண்டுகள் மிகைத்திருந்த போதிலும் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டவாறு உற்பத்தி இயலளவை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில இயந்திரத்தை நிறுவுவதற்கு உரிய தனியார் கம்பனிக்கு முடியாதிருந்தது. அதற்கிணங்க உரிய உடன்படிக்கையை இரத்துச்செய்து ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கு அல்லது ஏனைய வழங்குனரின் மூலம் உரிய செயற்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் பளுகஸ்வெவ தோட்டத்தில் அமைந்துள்ள எதிர்ப்பு வண்டு ஆராய்ச்சி கூடத்தில் 2017 ஆம் ஆண்டின் போது உற்பத்தி செய்யப்பட்ட 10,500 எதிர்ப்பு வண்டு பேக்களுக்கு அண்மித்த அளவான எதிர்ப்பு வண்டுகளை வண்டுத் தாக்கத்திற்கு உள்ளாக்கியுள்ள துறைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்காமையின் காரணமாக 2018 ஆகஸ்ட் 10 ஆந் திகதியளவில் காலாவதியாதியிருந்தது.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் தரவுகளின் பிரகாரம் வண்டு தாக்கியுள்ள மரங்களுக்காக ஒவ்வொரு 4 மரங்களில் ஒரு மரத்திற்கு எதிர்ப்பு வண்டு பொதிகள் 2 வருட காலம் முழுவதும் 2 மாதங்களுக்கும் 3 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலத்திற்கு ஒரு தடவை போடுவதன் மூலம் இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவிக்கபடப்பட்டிருந்தும் எதிர்ப்பு வண்டுகள் ஒரு தடவை விடுவிக்கப்பட்ட பளுகஸ்வெவ தோட்டத்தின் 04 துறைகளில் 02 துறைகளுக்காக மீளாய்வாண்டின் போது மீண்டும் எதிர்ப்பு வண்டுகள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சியுள்ள 02 துறைகளுக்காக இரண்டாவது வழங்கல் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த விடுவிப்புக்காகவும் 04 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. நிர்ணயிக்கப்பட்டவாறு எதிர்ப்பு வண்டுகள் ஈடுபடுத்தப்படாமையின் காரணமாக நோயை தடுக்க முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் கம்பனியின் 6 தோட்டங்களில் 139,682 தென்னங் கன்றுகள் நடுகை செய்யப்பட்டிருந்தும் பயிர்களுக்கு போதியளவு பசளை பயன்படுத்துதல், காடுகளை அகற்றுதல், நீர் வழங்குதல் ஆகிய செயற்பாடுகள் திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றப்படாமையின் காரணமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 35,555 நாற்றுக்கள் அதாவது 25 சதவீதமானவை அழிவடைந்திருந்தன.

(இ) திவுலபிடிய தோட்டத்திற்குரிய 68.33 ஹெக்டயர் வயல் காணிகள் காணப்பட்டிருந்தும் அவற்றில் 64.62 ஹெக்டயர் காணி தற்பொழுது வரை குத்தகை விவசாயிகளால் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் இக்காணிகளை மீண்டும் கம்பனியின் பயன்பாட்டிற்குப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவத்தால் நடவடிக்கை

எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் எஞ்சியுள்ள 3.71 ஹெக்டயர் வயல் காணிகளை வினைத்திறனாக குறிக்கோள்களுக்குப் பயன்படுத்துவதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரித்த பதவியணியினரின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் 11 பதவிப் பெயர்களின் கீழ் 23 வெற்றிடங்களும் இரண்டு பதவிப் பெயர்களின் கீழ் 05 ஊழியர்களின் மிகைகளும் காணப்பட்டதுடன் அதனுள் உள்ளகக் கணக்காய்வாளர் 02 உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகள், பிரதி பொது முகாமையாளர் ஆகிய பதவிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) கம்பனியால் 2017 யூலை 25 ஆந் திகதி ரூபா 173,000 செலவு செய்து பகிரங்க பத்திரிகை அறிவித்தலின் மூலம் கணக்காய்வு உதவியாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும் அந்த ஆட்சேர்ப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் இடம்பெற்றிருக்காததுடன் 2018 யூன் மாதத்தின் போது தலைமை அலுவலகத்திலும் தோட்ட பதவியணியிலும் பயிற்சி உத்தியோகத்தராக சேவையாற்றிய 13 ஊழியர்கள் நிரந்தர ஊழியர்களாக தோட்ட பதவியணிக்கு நியமிக்கப்பட்டு அவர்களில் 06 ஊழியர்கள் தலைமை அலுவலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி அங்கீகரித்த பதவியணிக்குள் இல்லாத உதவி பொது முகாமையாளர் - பொறியியல், பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஆகிய இரண்டு பதவிகளை உள்ளடக்கி அங்கீகரித்த பதவியணிக்குள் இல்லாத 10 பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுக் குறைபாடுகள் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது அனுப்பிவைக்கப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டின் மூலம் இலக்குகள் தோற்றுவிக்கப்பட்டிருந்தும் அவற்றை அடைந்துகொள்ளும் நடைமுறை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. |
| (ஆ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | நீண்டகால கடன் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு அல்லது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | ஆளணி நிர்வாகம் | இளம் தொழிலாளர்களை புதிதாக சேவைக்குச் சேர்த்துக்கொள்ளாமையின் காரணமாக தற்பொழுதுள்ள ஊழியர்களில் அதிக அளவானவர்கள் 50 வயதிற்கு |

மேற்பட்டவர்களாக உள்ளதுடன் எதிர்காலத்தில் புதிய தொழிலாளர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய அவதானம் காணப்படுகின்றது.

(ஈ) தோட்ட முகாமைத்துவம்

ஒரு தென்னை மரத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் விளைச்சல் குறைவடைதல், மீள்தென்னைப் பயிர்ச்செய்கைத் திட்டத்தை அமுல்படுத்தாமை, விஞ்ஞான ரீதியாக தென்னைப் பசளைகளை ஈடுபடுத்தாமை, முறையான பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைமைகளை பின்பற்றாமை, போதியளவான நீர் வழங்கல் முறைமைகள் இல்லாமை என்பவற்றின் காரணமாக பயிரிடப்பட்ட நாற்றுக்கள் அழிவடைந்து போகுதல்.